**கொழும்பு தாமரைக் கோபுர முகாமைத்துவ தனியார் கம்பனி - 2023**

-----------------------------------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழிவற்ற அபிப்பிராயம்

கொழும்பு தாமரைக் கோபுர முகாமைத்துவ தனியார் கம்பனியின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விபரமான வருமான கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் பொழிப்பாக்கிய முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள், என்பவற்றை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

கம்பனியின் நிதிகூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும், காசுப்பாய்ச்சலினையும் உண்மையாகவும் நியாயமாகவும் காட்டும் வகையில் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட நிருவகிக்கும் தரப்பினர்களின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது கம்பனியின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்நியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்நியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறைமை தொடர்பாக பரீட்சிக்கும் பொறுப்பு தொடர்புபட்ட தரப்பினர்களால் வகிக்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16 (1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாக பேணுதல் வேண்டும

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடன்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக சபையின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்கு வருதல், பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால் நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்த வேண்டியதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் பேணியவையாக காணப்படாதிருந்ததால் எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும் எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கும் போது கம்பனியின் பணிகளை தொடர்ச்சியாக மதிப்பாய்வு செய்வதற்கு இணங்கக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புததகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா,

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது கம்பனியின் கட்டுப்பாட்டு கம்பனியினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க சபை செயற்பட்டுள்ளதா,

- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா,

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா,

## 1.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் அமைப்பு அகவிதி தொடர்பான 13(ஆ) பிரிவு | கம்பனியின் பங்குடமையாளர்களின் உரிமை மற்றும் கடப்பாடுகள் தொடர்பாக ஏற்பாடுகள் வழங்கப்படுதல் வேண்டும். கொழும்பு தாமரைக் கோபுர முகாமைத்துவ தனியார் கம்பனியின் அமைப்பு அகவிதியின் இலக்கம் 02 இன் பிரகாரம் கம்பனி திறைசேரியின் செயலாளருக்கும் மற்றும் இலங்கைத் தொலைத் தொடர்பு ஒழுங்குபடுத்துதல் ஆணைக்குழுவுக்குமிடையே பிரதான உடன்படிக்கை (Master Agreement) ஏற்படுத்திக்கொள்ள வேண்டிய போதிலும் கம்பனியால் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இணங்கிக் கொள்ளப்படுகின்றது. சட்டமா அதிபதியின் அங்கீகாரத்துடன் அமைப்பு அகவிதியிலுள்ள பிரிவு நிர்ணயிக்கப்பட்ட காலத்தின் போது திருத்தம் செய்யப்பட்டது. | 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் அமைப்பு அகவிதி தொடர்பான 13(ஆ) பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) 2022 சனவரி 14 ஆந் திகதிய PED 01/2015 (ii) ஆம் இலக்க | (i) 2023 மார்ச் 16 ஆந் திகதிய பணிப்பாளர் சபை கூட்ட அறிக்கையின் தீர்மான இலக்கம் 13 இற்கு இணங்க சம்பளத்திற்கு மேலதிகமாக செலுத்தப்படுகின்ற | இணங்கிக் கொள்ளவில்லை. | 2023 மார்ச் 16 ஆந் திகதிய பணிப்பாளர் சபை தீர்மானத்திற்கு இணங்க 2022 சனவரி 14 ஆந் |

| | | | | |
|---|---|---|---|---|
| | அரசாங்க தொழில்முயற்சிகள் சுற்றறிக்கை | அனைத்து படிகளுக்குமாக அரசாங்க சுற்றறிக்கை தொடர்புபடுத்தப்பட வேண்டும். என காட்டப்பட்டிருந்தும் உயர் முகாமைத்துவ மட்டத்தின் (HMI) உத்தியோகத்தர்களுக்கு எரிபொருள் படியாக மாதாந்தம் எண்ணை லீற்றர் அளவு செலுத்தப்பட வேண்டிய போதிலும் கம்பனியால் அதற்கு முரணாக 2023 ஆம் ஆண்டில் 19 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 4,441,459 தொகை செலுத்தப்பட்டது.<br>(ii) உத்தியோகபூர்வ வாகனங்களுக்கு தகமையல்லாத 20 உத்தியோகத்தர்களுக்கு 2023 ஆம் ஆண்டில் வாகனப் படியாக ரூபா 4,231,577 செலுத்தப்பட்டது. | | திகதிய PED 0/2015 (ii) ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும். |
| (இ) | நிதி மற்றும் வெகுசனத் தொடர்பு அமைச்சின் 2017 ஒக்தொபர் 25 ஆந் திகதிய எம்.எஸ்.டீ/சுற்றறிக்கை/2017 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் 05/2017 ஆம் இலக்கம் | 2023 மார்ச் 16 ஆந் திகதிய பணிப்பாளர் சபை கூட்ட அறிக்கையின் திர்மான இலக்கம் 13 இற்கு இணங்க செலுத்தப்படுகின்ற அனைத்து படிகளுக்குமாக அரசாங்க சுற்றறிக்கை தொடர்புபடுத்தப்பட வேண்டும் என காட்டப்பட்டிருந்தும் மற்றும் கம்பனியின் அனைத்து உத்தியோகத்தர்களின் செயற்பாட்டு சேவைக் காலம் 06 ஆண்டுகளுக்கு குறைவு என்பதனால் அச்சுற்றறிக்கையின் பிரகாரம் ஒரு மாதத்திற்கு செலுத்தக்கூடிய உச்ச அளவு தொழில்சார் படி ரூபா 3,000 ஆக இருந்ததனால் 2023 ஆம் ஆண்டில் கம்பனியின் 13 உத்தியோகத்தர்களுக்குச் செலுத்த வேண்டிய தொழில்சார் படி ரூபா 282,000 ஆக இருந்த போதிலும் கம்பனியால் ரூபா 2,237,600 பணம் செலுத்தப்பட்டிருந்தது. | இணங்கிக்கொள்ளவில்லை. | 2023 மார்ச் 16 ஆந் திகதிய பணிப்பாளர் சபை தீர்மானத்திற்கு இணங்க வெகுசனத் தொடர்பு அமைச்சின் 2017 ஒக்தோபர் 25 ஆந் திகதிய எம்.எஸ்.டீ/சுற்றறிக்கை/2017 ஆம் இலக்க முகாமைத:துவ சேவைகள் சுற்றறிக்கையின் 05/2017 ஆம் இலக்கத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஈ) | 2021 நவம்பர் 16 ஆந் திகதிய அரசாங்கத்தின் தொழில்முயற்சி களுக்கான செயற்பாட்டுக் கையேட்டின் 5.3 ஆம் இலக்க பந்தி | வரிக்குப் பின்னைய இலாபத்தில் ஆகக் குறைந்தது 30 சதவீதம் பங்கிலாபமாக திறைசேரிக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும் கம்பனியின் முழு மூலதனமும் திறைசேரிக்குச் சொந்தமானது என்பதனால் மேற்கூறிய 30 சதவீத பங்கிலாபத்திற்கு மேலதிகமாக மிகுதிப் பங்கிலாபமும் திறைசேரிக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டிய போதிலும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இணங்கிக்கொள்ளவில்லை. அது பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்திற்கு இணங்க தீர்மானிக்கப்படும். | 2021 நவம்பர் 16 ஆந் திகதிய அரசாங்க தொழில் முயற்சிகளுக்கான செயற்பாட்டு கையோட்டின் 5.3 ஆம் இலக்க பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 5.4.4.(1) ஆம் பிரிவு | ஏற்றுக்கொள்ளக்கூடிய முற்பணங்கள் கொடுப்பனவானது பிணைகளைச் சமர்ப்பிப்பதன் அடிப்படையில் ஒப்பந்த பணத்தில் 20 சதவீத உச்ச அளவிலான முற்பணங்களாக செலுத்தக் கூடியதாக இருந்த போதிலும் கம்பனியால் பல்வேறு சதவீதங்களில் ரூபா 65,088,221 முற்பணம் செலுத்தப்பட்டிருந்தது. | ரூபா 65,088,221 தொகைக்கு இணங்கிக்கொள்ளப்படுகின்றது. | அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 5.4.1(1) ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 229,953,287 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்ததாக முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 142,062,840 ஆக இருந்தது. அதற்கிணங்க விளைவுகளில் ரூபா 87,890,447 அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் மொத்த வருமான அதிகரிப்பு பிரதான காரணமாக இருந்தது.
.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | கம்பனியால் நடாத்தப்படுகின்ற ஞாபகார்த்த விற்பனைக் கடைகளுக்காக 2023 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து யூன் 30 ஆந் திகதி வரையான 06 மாத காலத்திற்காக ஆலோசகர் ஒருவர் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்ததுடன் ஆலோசகருடன் மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் 04 மற்றும் 06 ஆம் பிரிவுகளின் பிரகாரம் அவருக்கு அனைத்து படிகளும் உள்ளடங்கலாக ரூபா 200,000 மாதாந்த படியினை மாத்திரம் செலுத்துவதற்கு உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தது. எனினும் உடன்படிக்கையின் பிரிவுகளுக்கு முரணாக கம்பனியால் ஆலோசகருக்கு 2023 பெப்ரவரி, மார்ச் ஆகிய இரண்டு மாதங்களுக்காக போக்குவரத்துப்படியாக ரூபா 142,800 பணம் செலுத்தப்பட்டிருந்தது. மேலும் ஆலோசகருடன் மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் அவரின் தொழில் விபரம் (Job description) பின்னிணைப்பு A இன் மூலம் இணக்கப்பட்டுள்ளது என குறிப்பிடப்பட்டிருந்தும் அப்பின்னிணைப்பு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் 2023 யூலை மாத்திலிருந்து திசெம்பர் 31 ஆந் திகதி வரை மாதாந்த சம்பளம் ரூபா 275,000 வரையும் 2024 சனவரியிலிருந்து யூன் 30 ஆந் திகதி வரை மாதாந்த சம்பளம் ரூபா 300,000 ஆக 02 சந்தர்ப்பங்களின் போது சேவைக் காலத்தினை நீடித்து அவரின் சம்பளம் அதிகரிக்கப்பட்டிருந்ததுடன் ஆலோசகரின் ஆலோசனைக் காலத்தினை நீடிப்பதற்கான காரணம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கொடுப்பனவுடன் இணைக்கப்பட்டுள்ள அறிக்கைகளின் பிகாரம் ஆலோசகர் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தரின் அங்கீகாரத்துடன் ஓட்ட வரைபடத்தினூடாக அவரின் கொடுப்பனவு வேண்டுதல் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. தொடக்க சந்தர்ப்பத்தின் போது கம்பனிக்கான புதிய வழங்குனர்களைச் சந்திப்பதற்காக ஆலோசகருக்கு இப்போக்குவரத்து செலவு மேற்கொள்ளப்பட்டது.<br><br>எனவே இது மாதாந்த படி அல்லாததுடன் இந்த அங்கீகார ஆவணத்தை அடிப்படையாகக் கொண்டு நிதிப் பிரிவின் மூலம் மீளளிப்பாகச் செலுத்தப்பட்டது. | கம்பனி ஆலோசகருடன் மேற்கொண்ட உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2023 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட ஆசிய கிண்ண கிரிகட் போட்டியினை காட்சிப்படுத்துவதற்காக அவதானிப்பு தளம் பயன்படுத்தப்பட்டதுடன் அதற்காக கம்பனியால் ரூபா 1,685,469 செலவு செய்யப்பட்டிருந்தும் கிரகட் போட்டியினை பார்வையிடுவதற்கான அனுமதி சீட்டுக்கள் வழங்கப்படாமையின் காரணமாக எந்த வருமானமும் உழைக்கப்பட்டிருக்கவில்லை. | இதற்காக விசேட நுழைவுப் பத்திரம் வழங்கப்படாததுடன் காட்சிக் கூடத்திற்கு உட்செல்லும் நுழைவுப் பத்திரமே போட்டியை பார்வையிடுவதற்கான அனுமதியை வழங்கியுள்ளது. | ஒவ்வொரு செயற்பாட்டிற்குமாக நுழைவுப் பத்திரங்கள் வழங்கப்படுதல் வேண்டும். |
| (இ) | கொழும்பு தாமரைக்கோபுர கம்பனியின் 2023 ஆம் ஆண்டிற்கான பாதீட்டின் மூலம் இனங்காணப்பட்டிருக்காத 08 வருமான | 2023 ஆம் ஆண்டிற்கான பாதீட்டுடினைத் திருத்தம் செய்வதற்கு போதியளவு காலம் இருக்கவில்லை. ஏனென்றால் | பாதீடு திருத்தம் செய்யப்படுதல் |

| | | | |
|---|---|---|---|
| | வகைகளுக்காக சுழலும் சிற்றுண்டிச்சாலையிலிருந்து, புகைப்படம் எடுப்பதிலிருந்து, சிறுவர் புகையிரத்திலிருந்து மற்றும் ஞாபகார்த்த விற்பனைக் கடையிலிருந்து ரூபா 81,521,995 கிடைத்திருந்ததுடன் 2023 ஆம் ஆண்டிற்கான கொழும்பு தாமரைக் கோபுர கம்பனியின் பாதீட்டின் மூலம் பணம் ஒதுக்கீடு செய்யப்படாதிருந்தும் Citrus PLC கம்பனியின் மற்றும் ஞாபகார்த்த பொருள் விற்பனைக் கடையின் நேரடி செயற்பாட்டுச் செலவுளுக்காக ரூபா 90,416,715 தொகை மற்றும் விடுமுறை தினச் சம்பளம், கணக்கீட்டு சேவை கட்டணம், பணிப்பாளர் சபை படிகள், உபசரிப்பு செலவுகள், பிரயாணச் செலவுகள், சுத்திகரிப்பு கட்டணம் முதலிய தாபன மற்றும் நிருவாகச் செலவுகளுக்காக ரூபா 168,783,217 செலவு செய்யப்பட்டிருந்தது. | செயற்திட்டங்களின் ஆற்றல் தனித்தனியாக பாதீட்டிற்கு உட்படுத்தப்பட்டுள்ளதுடன் அவ்வாறான செயற்திட்டங்கள் தாமதமடையுமாயின் சந்தர்ப்பக் கிரயம்/ நட்டம் ஏற்படும் என்பதனாலாகும். | வேண்டும். |
| (ஈ) | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கம்பனியின் கடன்பட்டோர் மீதியில் ரூபா 3,495,912 பெறுமதியான 09 கடன் மீதிகள் 2024 மார்ச் 28 ஆந் திகதி வரை அறவிடப்படாது காணப்பட்டது. அத்திகதி வரை இக்கடன் மீதி ஒரு ஆண்டிற்கு மேற்பட்ட காலமாக அறவிட வேண்டிக் காணப்பட்டதுடன் இக்கடன் மீதியை அறவீடு செய்வதற்காக போதியளவு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இணங்கிக்கொள்ளப்படுகின்றது. | நிலுவையாக உள்ள கடன்பட்டோர் மீதியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மேற்கூறிய கடன் மீதியில் வெளி தனியார் கம்பனியிடமிருந்து அறவீடு செய்வதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த ரூபா 1,060,875 கடன் மீதிக்காக நூறு சதவீதம் ஐயக்கடனுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. இவ்வாறு ஐயக்கடனுக்காக ஒதுக்கீடு செய்வதற்கான காரணம் இந்த நிறுவனத்தினால் கம்பனியின் வளவில் ஒரு கடையினை நடாத்துவதற்கு குத்தகைக்குப் பெற்ற ஒரு நிலப் பகுதியில் நிர்ணயிக்கப்பட்ட கடைக் கட்டிடத்திற்காக ரூபா 2,533,870 செலவு செய்தல் என கம்பனிக்கு தெரிவிக்கப்பட்டிருந்தது. | இணங்கிக்கொள்ளப்படுகின்றது. உரிய பணத்தை தீர்த்துவைக்குமாறு பல சந்தர்ப்பங்களில் அவர்களுக்கு எழுத்துமூல ம் தெரிவிக்கப்பட்டதுடன் அவர்கள் கடித்தின் மூலம் தெரிவித்ததானது உரிய கடை சார்பாக மேற்கொள்ளப்பட்ட பெறுமதி சேர்க்கும் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதில் மற்றும் நிர்மாண நடவடிக்கைகளுக்காக ரூபா 2,533,870 பணம் செலவு செய்யப்பட்டது என தெரிவிக்கப்பட்டது. கம்பனியால் உரிய பணத்தை எதிரீடு செய்ய முடியாது என தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் உரிய பணத்தை தீர்த்துவைப்பதற்காக எழுத்துமூலம் தெரிவிக்கப்பட்டது. அவ்வாறே எதிர்காலத்தில் குறிப்பிட்டவாறு உரிய பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்போம். | நிலுவையாக உள்ள கடன்பட்டோர் மீதியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | 2023 மார்ச் 16 ஆந் திகதிய பணிப்பாளர் சபை தீர்மானத்திற்கு இணங்க ஆகக் குறைந்த சம்பள அடிப்படை, செயலாற்றல் மீளாய்வு, மதிப்பீட்டு அறிக்கை, தொழில் விபரம் என்பவற்றிற்கு இணங்க தயாரிக்கப்பட்ட தகமைகள், திறன்கள் ஆகிய தகவல்களை உள்ளடக்கிய பணிப்பாளர் சபையின் சம்பள பரிமாற்றம் தயாரிக்கப்பட்டு சம்பளம் செலுத்தப்பட்டிருந்தது. மேலும் ஒவ்வொரு உத்தியோகத்தருக்கும் செலுத்திய மிகையான சம்பளத்தை இனங்காண்பதற்கு உரிய விபரம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2023 மார்ச் மாத்தின் போது புதிய சம்பள படிநிலையில் (Operational Salary Ladder) அமர்த்துவதற்கு முன்னர் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.<br><br>பிரதான நிறைவேற்று பணிப்பாளர் மற்றும் உயர் முகாமைத்தவத்தின் செயலாற்றல் மதிப்பீடுகள் பணிப்பாளர் சபையின் மூலம் மேற்கொண்டு 2023 மார்ச் மாதம் சம்பள படிநிலையில் அமர்த்தப்பட்டுள்ளது. | சம்பள பரிமாற்றத்திற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும். |

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | கொழும்பு தாமரைக் கோபுர முகாதைத்துவ தனியார் கம்பனி மற்றும் Citrus Leisure பீ.எல்சீ கம்பனி கொழும்பு தாமரைக் கோபுர கட்டிடத்தின் 25, 26, 27, 28 ஆம் மாடிகள் மற்றும் சமையலறையை Hospitality Indystry முறைமையில் வியாபாரத்தினை மேற்கொள்வதற்காக உடன்படிக்கை செய்துகொண்டிருந்தது. அந்த உடன்படிக்கையின் 8.1 ஆம் பிரிவின் பிரகாரம் மொத்த வருமானத்தில் 3.5 சதவீத முகாமைத்துவ கட்டணமும் 8.2 ஆம் பிரிவின் பிரகாரம் ஒவ்வொரு மாதமும் மொத்த ஊழியர் கிரயத்திற்கு மேலதிகமாக அக்கிரயத்தில் இன்னும் 10 சதவீத அளவான தொகையும் செலுத்த வேண்டியிருந்ததுடன் அதற்கு மேலதிகமாக மொத்த செயற்பாட்டு இலாபத்தில் 20 சதவீதம் செலுத்த வேண்டியிருந்தது. Citrus Leisure பீ.எல்சீ கம்பனியின் செயற்பாட்டு நடவடிககைகளின் காரணமாக 2023 ஒக்தோபரிலிருந்து 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரை ரூபா 20,345,977 தேறிய இலாபம் வழங்கப்பட்டிருந்தும் அக்காலத்திற்காக ரூபா 1,450,700 முகாமைத்துவ கட்டணமும் ரூபா 1,067,245 ஊழியர் சடம்பள கிரயமும் கொழும்பு தாமரைக் கோபுர முகாமைத்துவ தனியார் கம்பனியால் மேற்கூறியவாறு மொத்த செயற்பாட்டு நட்டம் கிடைக்கும் சந்தர்ப்பத்தில் செயற்படுகின்ற முறைமை தொடர்பாக உடன்படிக்கையில் நிபந்தனை உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் கம்பனியால் Citrus Leisure பீ.எல்சீ கம்பனிக்கு மாதாந்த இலக்கு வழங்கப்படாதிருந்ததுடன் | நிர்ணயிக்கப்பட்ட நடைமுறையினை பின்பற்றி மற்றும் நீண்டகால தொழில்முயற்சியை எதிர்கால குறிகாட்டியினை கவனித்தப் பார்த்ததன் பின்னர் உடன்படிக்கையின் பிரிவு பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் கம்பனியின் இந்த புதிய தொழில் முயற்சியின் செயல்முன்னேற்றத்தினை அடிப்படையாகக் கொண்டு உடன்படிக்கையின் செயற்பாட்டாளராக Citrus உடன் திருத்திய வரையறைகள் மற்றும் நிபந்தனைகள் கலந்துரையாடப்பட்டு வருகின்றது. | கொழும்பு தாமரைக்கோபுர முகாமைத்துவ தனியார் கம்பனிக்கு சாதகமான வகையில் உடன்படிக்கை மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அதன் நடவடிக்கைகளை மேற்பார்வை செய்வதற்காக பொறுப்புக்கூற வேண்டிய ஒரு உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் மேற்கூறிய உடன்படிக்கையின் 3.1 (அ) பிரிவின் பிரகாரம் ஊழியர்களைத் தெரிவு செய்தல், நியமித்தல், சேவையை முடிவுறுத்துதல், சம்பளத்தை தீர்மானித்தல் என்பன கம்பனியுடன் கலந்தாலோசித்து தீர்மானிக்கப்பட வேண்டிய போதிலும் Citrus Leisure பீ.எல்சீ கம்பனியின் ஊழியர்களைத் தெரிவுசெய்தல், நியமித்தல், சேவையை முடிவுறுத்துதல், சம்பளத்தை தீர்மானித்தல் ஆகிய எந்த செயற்பாட்டிற்கும் கம்பனி தொடர்புபட்டிருக்கவில்லை. அந்நிலைமையின் காரணமாக Citrus Leisure பீ.எல்சீ கம்பனிக்கு தேவையான ஊழியர்களைச் சேர்த்துக் கொள்ளல் சம்பளத்தை தீர்மானித்தல் மேற்கொள்ளக்கூடியதாக இருந்ததுடன் அக்கம்பனி சமர்ப்பிக்கின்ற எந்த சம்பளத்தினையும், படியினையும் கம்பனியால் செலுத்துவதற்கு கட்டுப்பட்டிருந்தது. அவ்வாறே நடமாடும் தொலைபேசியை வழங்குவதற்கு ரூபா 1,013,910 செலுத்தப்பட்டிருந்தும் அதற்காக உடன்படிக்கையில் அங்கீகாரம் கிடைத்திருக்கவில்லை. | | |
| (ஆ) | கம்பனியால் செயற்பட்டு வருகின்ற சுழலும் உணவுச்சாலையின் ஊழியர்களுக்கு சீருடைகளை உள்ளடக்கிய பொருட்களை கொள்வனவு செய்வதற்காக வழங்கனருக்கு கொள்வனவு கட்டளை அனுப்பிவைக்கப்பட்டிருந்ததுடன் அவர்களினால் அனுப்பிவைக்கப்பட்டடிருந்த 03 பெயரலவிலான இன்வொயிஸ்களை அடிப்டையாகக் கொண்டு முறையே ரூபா 495,600, ரூபா 3,240,000 மற்றும் 4,013,800 ஆக மொத்த பெறுமதி ரூபா 7,750,190 தொகை அதாவது இன்வொயிஸ் பெறுமதியில் 70 சதவீதம் அளவிலானது முற்பணமாக செலுத்தப்பட்டிருந்தது. இந்த வழங்கலில் ரூபா 84,700 பெறுமதியான லினன் துணிகள் 2024 மே 27 ஆந் திகதி வரை வழங்கப்பட்டிருக்கவில்லை. | உணவுச்சாலை மற்றும் உணவு உபசரிப்பு மண்டபத்தை 2023 திசெம்பர் மாத்தில் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் அதன் ஊழியர்களின் சீருடைகள் மற்றும் அதுசார்ந்த துணிகளை துரிதமாக பெறுகை செய்யும் தேவைப்பாடு காணப்பட்டதுடன் அதற்கான மூலப்பொருட்களை கொள்வனவு செய்வதற்காக வழங்குனர் முற்பணத்திற்கு விண்ணப்பித்திருந்தார். இந்த அவசர தேவைப்பாட்டினை கருத்தில்கொண்டு நிறுவனத்தினால் இம்மூலப்பொருட்களை கொள்வனவு செய்வதற்காக இந்த முற்பணங்கள் விடுவிக்கப்பட்டது. இந்த உணவுச்சாலை மற்றும் உணவு உபசரிப்பு மண்டபத்திற்கான வியாபாரத்தின் மேம்பாட்டிற்காக ஊழியர் வேண்டுதலின் அடிப்படையில் அடிக்கடி ஊழியர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டதுடன் அவர்களுக்குத் தேவையான தைத்த | அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 5.4.1 (1) ஆம் பிரிவின் பிரகாரம் முற்பணங்கள் செலுத்தப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | ஆடைத் தேவைப்பாட்டின் அடிப்படையில் வழங்குனரினால் பூர்த்திசெய்து வழங்கப்பட்டது. தற்பொழுது இப்பொருட்களில் அதிகமானவை வழங்கப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் ஊழியிர்களை சேர்த:தக்கொள்வதன் அடிப்படையில் மிகுதியான வழங்கல்கள் மேற்கொள்ளப்படும். | |
| (இ) | அரசாங்க தொழில்முயற்சிகளுக்கான செயற்பாட்டு கையேட்டின் 6.7 ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் ரூபா 393,621,112 தொகையான நிலையான சொத்துக்கள் மற்றும் களஞ்சிய பொருட்களின் வருடாந்த மீளாய்வு மேற்கொள்ளப்பட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2024 மே 27 ஆந் திகதி வரை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இணங்கிக் கொள்ளப்படுகின்றது. மீளாய்வுச் சபை 2024 யூன் 30 ஆந் திகதியில் மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டுளது. | அரசாங்கத்தின் தொழில் முயற்சிகளுக்கான செயற்பாட்டுக் கையேட்டின் 6.7 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | கொழும்பு தாமரைக் கோபுரம் தொடர்பான பௌதீக பரீட்சிப்பின் போது கோபுரத்தினை பார்வையிடும் மாடியின் சுவர்களின் நிறப் பூச்சுக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் பெயர்கள் மற்றும் பல்வேறு உருவங்கள் வரையப்பட்டிருந்தன. அந்த பாதிப்புக்களைக் குறைப்பதற்காக ரூபா 1,084,050 செலவு செய்து காட்சிக் கூடத்தில் மின்சார வெளிச்சமூட்டி தொங்கவிடும் பிளாஸ்ரிக் பலகைகள் பொருத்தப்பட்டிருந்தும் அவையும் பார்வையாளர்களால் சேதப்படுத்தப்பட்டிருந்தது. கோபுரத்திற்குள் பாதுகாப்பு கமராக்கள் பொருத்தப்பட்டு அதன் செயற்பாட்டிற்காக ஊழியர்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்தும் அச்சேதத்தினை இனங்கண்டு தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு தேவையான ஆக்ககுறைந்த பாதுகாப்பு உத்தியோகத்தர்களை ஈடுபடுத்துவதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இணங்கிக்கொள்ளவில்லை. தாமரைக் கோபுரத்தின் பார்வையாளர் மாடியின் சுவர்களின் நிறப்பூச்சுக்களுக்கு செதம் ஏற்படுத்துகின்ற பாடசாலை மாணவர்கள் அல்லாத நபர்கள் பொலீசில் ஒப்படைக்கப்படுவதுடன் அக்காட்சிகளுடனன உரிய சம்பவம் தொலைக்காட்சி செய்தி அலைவரிசையினூடாக ஒளிபரப்பப்பட்டது. மேலும் அவ்வாறு சேதம் ஏற்படுத்த வேண்டாம் எனத் தெரியப்படுத்தும் நிகழ்ச்சிதிட்டங்களும் செய்திகள் மற்றும் சமூக ஊடகங்களினூடாக மேற்கொள்ளப்பட்டது. மேற்கூறிய வேலைத்திட்டங்களின் காரணமாக இந்த நிலைமையை திருப்பிதியாக கட்டுப்படுத்தக் கூடியதாக இருக்கும். உரிய நிலைமையை கட்டுப்படுத்துவதற்கான பரிகாரமாக மின்சார வெளிச்சத்தின் மூலம் தொங்கவிடப்படும் பிளாஸ்ரிக் பெயர்ப்பலகைகள் பொருத்தப்பட்டதுடன் பார்வையாளர்களால் அதன் மீது கைகளை வைக்கும் போது அந்த பிளாஸ்ரிக் பலகைகளுக்கும் பாதிப்புக்கள் ஏற்பட்டதானது அதற்காக ஈடுபடுத்தப்பட்டுள்ள | தேவையான ஆகக் குறைந்த பாதுகாப்பு உத்தியோகத்ரத்களை ஈடுபடுத்துவதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | பிளாஸ்ரிக் போட் நிர்ணயிக்கப்பட்ட தரத்தில் (ஈடுபடுத்தப்பட்ட பிளாஸ்ரிக் போட்களின் கனம் 02 மி.மீற்றர்) இல்லாததினாலாகும். மேலும் பார்வையாளர்களால் அந்த பிளாஸ்ரிக் பலகைகளுக்கு அருகாமையில் இருக்கும் போது அந்த பிலாஸ்ரிக் பலகைகளுக்க பாதிப்பு ஏற்படும் முறைமையை அவதானித்தல் போன்ற உணர்வுக் காண்காட்சிகளைப்பதற்காக தற்பொழுது பொருத்தப்பட்டுள்ள கமரா முறைமையின் மூலம் அறிந்துகொள்வதற்கான இயலுமை இல்லை. அவ்வாறே அதிக அளவான பார்வையாளர்கள் வருகை தருகின்ற சந்தர்ப்பங்களின் போது காட்சிக் கூடத்தில் காணப்படுகின்ற பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கு விரைவாக உரிய இடத்தில் இருப்பது நடைமுறைச்சாத்தியமற்றதாகும்.<br><br>இந்த விடயங்களை கவனித்துப் பார்த்ததன் பின்னர் காட்சிக்கூடத்தில் அவதானிப்பு நடவடிக்கைகளுக்காக தற்பொழுது காணப்படுகின்ற பாதகாப்பு கமரா முறைமை போதியதல்லாததனால் அதில் கமராக்களின் அளவினை அதிகரிப்பதற்கும் மிகவும் நல்ல தரமுள்ள (08 மி.மீற்றர் கனம் உள்ளவை) பிளாஸ்ரிக் பலகைகளை பொருத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | |
| (உ) | 2022 ஆகஸ்ட் 02 ஆந் திகதி கையொப்பமிட்ட முகாமைத்துவ உடன்படிக்கையின் பிரிவு இலக்கம் 7(b) மற்றும் 2023 ஏப்ரல் 10 ஆந் திகதி கையொப்பமிட்ட குத்தகை உடன்படிக்கையின் 2.2 (u) பிரிவின் பிரகாரம் கம்பனியால் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய இயந்திரங்கள் பழுதடையும் காப்புறுதி, இலத்திரனியல் காப்புறுதி 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரை பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இணங்கிக்கொள்ளப்படுகின்றது. | கம்பனியால் இயந்திரங்கள் பழுதடையும் காப்புறுதி மற்றும் இலத்திரனியல் காப்புறுதி பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும். |

### 3.3 பெறுகை முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 2023 ஆம் ஆண்டிற்கான பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருருக்காததனால் நியாயமாக பெறுகை மேற்கொள்ளப்பட்டது என்பதனையும் 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான செயல்முன்னேற்றத்தினையும் பரீட்சிக்க முடியாதுள்ளது. | இணங்கிக்கொள்ளப்படுகின்றது. 2024 இலிருந்து பெறுகைத்திட்டம் தயாரிக்கப்படும். | ஒரு பெறுகைத் திட்டத்தினைத் தயாரித்து பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும். |
| (ஆ) | நுழைவுச் சீட்டுக்களை அச்சிட்டு வழங்கும் ரூபா 3,055,875 பெறுகைக்காக அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 5.3.1(ஈ), 5.3.11 மற்றும் 5.4.10 (ஆ) பிரிவுகளின் பிரகாரம் நடவடிக்கை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் கேள்வி ஆவணங்களில் Section ITV 05 ஆம் பிரிவின் பிரகாரம் கேள்விதாரர் கழிவு வழங்குவதாயின் அக்கழிவினை உள்ளடக்கிய விலைக்கோரல்களைச் சமர்ப்பிக்குமாறு காட்டப்பட்டிருந்தும் இரண்டாவது ஆகக் குறைந்த விலையினைச் சமர்ப்பித்த கேள்விதாரர் அவ்வாறு செய்யாதிருந்தும் 2023 பெப்ரவரி 16 ஆந் திகதிய தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் சிபாரிசின் பின்னர் அதாவது 2023 பெப்ரவரி 17 ஆந் திகதி திருத்திய கேள்வி அனுப்பப்பட்டிருந்தது. அந்த திருத்திய கேள்வி கம்பனிக்கு கிடைத்த முறைமை தொடர்பான விபரம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | தற்பொழுது மேற்கொள்ளப்படுகின்ற பெறுகைக்களுக்காக இம்முறைமையினைச் சரிசெய்து கேள்வி ஆவணங்கள் மற்றும் பத்திரிகை அறிவுறுத்தல்களுக்காக தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் மற்றும் பெறுகைக் குழுவின் பரீட்சிப்பிற்கும் அங்கீகாரத்திற்கும் உட்பட்டு பெறுகை நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.<br><br>கேள்விதாரர்கள் கேள்விகளைச் சமர்ப்பித்தலினை ஊக்குவிக்கும் குறிக்கோளில் கேள்விப் பாதுகாப்பு மற்றும் செயலாற்றல் பிணைமுறியினைப் பெற்றுக்கொள்ளாமல் இருப்பதற்குத் திர்மானிக்கப்பட்டது.<br><br>இப்பெறுகையில் அதிக அளவான நுழைவுச்சீட்டு தேவைப்பாடு காணப்படுவது ரூபா 500 மற்றும் ரூபா 200 நுழைவுச் சீட்டுக்கள் ஆனதுடன் அதன் அளவு முறையே 10,000 மற்றும் 9,000 ஆகும். எனினும் அப்போது காணப்பட்ட இறக்குமதி மட்டுப்படுத்தலின் காரணமாக ஒரே வழங்கனருக்கு அதிக அளவான தேவைப்பாட்டுடன் நுழைவுச் சீட்டுக்களை அச்சிடுதலினை வழங்குதல் எங்கள் நிறுவனத்தின் பிரதான | பெறுகை வழிகாட்டிக்கோவையின் 5.3.1(ஈ), 5.3.11, 5.4.10(ஆ) மற்றும் கேள்வி ஆவணங்களில் Section ITV 05 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் திருத்திய கேள்வி கம்பனிக்கு கிடைக்கும் முறைமையானது வெளிப்படுத்தப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | வருமான வழியான பார்வையிடும் முனையத்திற்கு வருகின்ற விருந்தாளிகளுக்கு நுழைவுச் சீட்டுக்களை வழங்கவதற்கு முடியாமல் இருக்கும் ஆபத்தினை கவனித்துப் பார்த்து பெறுகைக் குழுவினால் அரசாங்க நிறவனமாகிய லேக்ஹவுஸ் நிறுவனத்திடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட கழிவுக்கு இணங்க அந்த 02 நிறுவனங்களுக்கு (லேக் ஹவுஸ் நிறுவனம் மற்றும் நெப்கோ நிறுவனம்) நுழைவுச் சீட்டுக்களை வழங்குதல் ஒப்படைக்கப்பட்டுள்ள து. இதன் போது எங்கள் நிறுவனத்திற்கு நட்டம் எற்படாத வகையில் நாட்டின் நிலைமைக்கு இணங்க ஆபத்தினை தவிர்த்துக் கொள்வதற்கு மாத்திரம் பெறுகைக் குழு தீர்மானம் எடுத்துள்ளது. | |
| (இ) | உல்லாசப் பூங்காவிற்காக வரியின்றி ரூபா 40,302,089 தொகையான Kids Play உபகரணங்களை வழங்குதல் மற்றும் ஸ்தாபித்தல் பெறுகைக்காக மதிப்பீட்டினைத் தயாரித்து பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்காததுடன் அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 5.4.4.(1) ஆம் பிரிவிற்கு முரணாக 80 சதவீதம் அதாவது ரூபா 32,241,671 தொகை 2023 ஒக்தோபர் 20 ஆந் திகதி முற்பணமாகச் செலுத்தப்பட்டிருந்தது. 2024 மே 27 ஆந் திகதி வரையும் இச்செயற்பாட்டினை முடிவுறுத்தி பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளகூடிய நிலைமைக்கு கொண்டுவராமையின் காரணமாக அப்பணத்தை முதலீடு செய்து கிடைக்கும் வட்டி வருமானம் கம்பனியால் இழக்கப்பட்டிருந்தது.<br><br>மேலும் 2023 செப்தெம்பர் 01 ஆந் திகதி பெறுமதி சேர் வரியற்ற பெறுமதியான ரூபா 40,302,089 தொகைக்கு கேள்விமனுதாரருக்கு கேள்வியை வழங்கியதன் பின்னர் 2023 செப்தெம்பர் 05 ஆந் திகதி கேள்வி மனுதாரரினால் தொடக்க கேள்வியில் உள்ளடக்கப்படாத ரூபா 5,062,985 இறக்குமதி வரி சேர்த்துக்கொள்ளப்பட்டதன் காரணமாக | அப்போது காணப்பட்ட பொருளாதார நிலைமைக்கு இணங்க புதிதாக ஆரம்பிக்கப்பட்ட எங்கள் நிறுவனம் தொடர்பாக வழங்கனர்களுக்கு மத்தியில் காணப்பட்ட அபிப்பிராயத்தின் காரணமாக 80 சதவீதமான முற்பண பிணையுடன் இந்த முற்பணத்தை வழங்குதல் இடம்பெற்றுள்ளது. அப்பிணையை நீடிப்பதற்கு வழங்குனரிடம் வேண்டுதல் மேற்கொள்ளப்பட்டதுடன் வழங்குனர் அது தொடர்பாக நடவடிக்கை எடுத்து வருகின்றார்.<br><br>கேள்வியை சமர்ப்பிக்கின்ற சந்தர்ப்பத்தில் கேள்விதாரரினால் இந்த இறக்குமதி வரி மற்றும் சமூக பாதுகாப்பு வரிகளின் அண்ணளவான தரவுகள் தொடர்பாக கேள்வி | அனைத்து கொள்வனவுகளுக்குமாக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும். அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 5.4.4. (1) ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் கேள்வியை சமர்ப்பிக்கும் நிபந்தனையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் பெறுகைச் செயற்பாடானது உரியகால எல்லைக்கள் பூர்த்திசெய்யப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | புதிய கேள்வி விலை ரூபா 45,365,074 ஆக இருந்தது. | ஆவணங்களில் காட்டப்பட்டிருந்தது. எங்கள் நிறுவனத்தினால் வரிக்காக தற்பொழுது கொடுப்பனவு செய்யப்பட்டிருக்காததுடன் வரியினை உள்ளபடியாக கணித்து அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் கொடுப்பனவு செய்யப்படும். | |
| (ஈ) | கம்பனியின் டிக்கட் கவுன்டரினை புனரமைப்பதற்காக கம்பனியின் பொறியியலாளரினால் பொறியியல் மதிப்பீடு மற்றும் அளவீட்டுப் பத்திரம் முறைப்படியாக தயாரிக்கப்படாமையின் காரணமாக மேற்கூறிய செயற்பாடு 02 நிர்மாண நிறுவனங்களின் மூலம் மேற்கொள்வதற்காக ரூபா 1,679,379 செலுத்தப்பட்டிருந்தது. | 02 டிக்கட் கவுன்டர்களை மாற்றம் செய்யும் முழுமையான செயற்பாட்டிற்காக ரூபா 1,960,800 தொகைக்கு 02 நிறுவனங்களுக்கு கேள்விகள் வழங்கப்பட்டுள்ளன. | பொறியியல் மதிப்பீடு மற்றும் அளவீட்டுப் பத்திரம் முறைப்படியாக தயாரிக்கப்படுதல் வேண்டும். |
| (உ) | ரூபா 18,810,000 பெறுமதியான LED 20x10 திரையினை வழங்குதல், ஸ்தாபித்தல், பரிட்சித்தல், அமுல்ப்படுத்துதல் மற்றும் பராமரித்தல் பெறுகைக்கான பொருட்கள் 2023 மே 17 ஆந் திகதி கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் ஒப்பந்தத்தில் 80 சதவீதம் அதாவது ரூபா 15,048,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. 2022 திசெம்பர் 02 ஆந் திகதி ஒப்பந்தம் பூர்த்திசெய்யப்பட வேண்டியிருந்த போதிலும் 2024 மே 27 ஆந் திகதி வரையும் ஒப்பந்தம் முடிவுறுத்தப்பட்டிருக்கவில்லை. | வழங்குனர் தற்பொழுது மேலே குறிப்பிட்ட பெறுகைக்குரிய அனைத்து பொருட்களையும் எங்கள் நிறுவனத்திற்கு வழங்கியுள்ளதுடன் பௌதீக செயல்முன்னேற்றம் 90% அளவாகும். எங்கள் நிறுவனத்தினால் பூர்த்திசெய்யப்பட வேண்டிய பெனல் போட்களின் நடவடிக்கையை பூர்த்திசெய்ததன் பின்னர் அடுத்துவரும் இரண்டு வாரங்களுக்குள் மேற்கூறிய ஒப்பந்தத்தினை பூர்த்திசெய்யலாம். | பெறுகை நடவடிக்கையை உரிய காலத்திற்கள் முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |